**<u>வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் சென்னை மாநகராட்சியில் 09.06.2010 அன்று மாலை 4.00 மணி அளவில் நடைபெற்ற கூட்டு ஒருங்கிணைப்பு கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு</u>**

மேற்கண்ட கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நிர்வாக இயக்குநர் சென்னை குடிநீர் வாரியம், ஆணையர், சென்னை மாநகராட்சி, ஆளும் கட்சி தலைவர், எதிர் கட்சி தலைவர், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள், சென்னை குடிநீர் வாரிய பொறியாளர்கள், சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்கள் அனைவரையும் வரவேற்றிப் பேசினார். இதே போன்ற ஆய்வுக் கூட்டம் கடந்த ஆண்டு 15.07.2009 அன்று நடைபெற்று, அப்போது எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் குறித்து விளக்கம் அளிக்குமாறு குடிநீர் மற்றும் கழிவு நீர் வழங்கல் துறை மேலாண்மை இயக்குநரை கேட்டுக் கொண்டார்.

1. கடந்த 15.07.2009 அன்று நடந்த கூட்டு ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு பிறகு சென்னைக் குடிநீர் வாரியம் கூடுதலாக 11 ஜெட்ராடிங் இயந்திரங்களையும் மற்றும் 21 தூர்வாரும் இயந்திரங்களையும் கொள்முதல் செய்ததாக சென்னைகுடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

2. சென்னைகுடிநீர் வாரியம், கழிவுநீர் கட்டமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கு தேவையான மொத்த தளவாடங்களை கணக்கீடு செய்துள்ளது. அதாவது 81 ஜெட் ராடிங் இயந்திரங்களும், 3 சூப்பர் சக்கர் இயந்திரங்களும் மற்றும் 70 தூர்வாரும் இயந்திரங்களும் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாவும். தற்பொழுது 56 ஜெட்ராடிங் இயந்திரங்களும் மற்றும் 53 தூர் வாரும் இயந்திரங்களும் உபயோகத்தில் உள்ளன என்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

3. எஞ்சியுள்ள 25 ஜெட் ராடிங் இயந்திரங்களும், 3 சூப்பர் சக்கர் இயந்திரங்களும் மற்றும் 17 தூர்வாரும் இயந்திரங்களும் சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் கொள் முதல் செய்யப்படும். இந்த இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, கொள்முதல் ஆணைகள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

4. குடிநீரில் குளோரின் அளவு மற்றும் பாக்டீரியா அளவையும் பல்வேறு இடங்களில் பரிசோதிக்கப்படுகிறது என்பதையும் குடிநீரை வினியோகம் செய்யும் பம்பிங் ஸ்டேஷனில் தேவையான அளவு குளோரின் அளவு இருப்பதாகவும், எங்கெல்லாம் பாதிப்புகள் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் குடிநீர் குழாய்கள் இணைப்பு துண்டிக்கப்பட்டு அக்குழாய்கள் தூய்மை படுத்தப்படுகிறது என்பதையும், உபயோகத்தில் உள்ள ஸின்டேக்ஸ் தொட்டிகள் தூய்மை படுத்தப்படுகிறது என்றும் விவரித்தார்.

5. மேலும், லைலா புயலுக்கு பிறகு தொற்றுநோய் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வயிற்றுப்போக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக கூறப்பட்டது. எனவே, வயிற்றுப்போக்கு மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்காக குடிநீரின் தரம் கடுங்கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

6. குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டிற்காக குளோரின் மாத்திரைகளை வழங்குவது குறித்தும், குடிநீரின் நுண்மங்கள் மற்றும் குளோரின் இருப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக அதிக அளவிலான மாதிரிகள் எடுப்பதைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

7. வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் பேசுகையில், கீழ்க்கண்ட சட்டமன்ற தொகுதி உறுப்பினர்களிடமிருந்து ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டதாக தெரிவித்தார்.

| வ.எண். | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி | இயந்திரங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அண்ணா நகர் | 4 | 80 |
| 2 | மைலாப்பூர் | 1 | 20 |
| 3 | தியாகராய நகர் | 1 | 20 |
| 4 | சைதாப்பேட்டை | 1 | 20 |
| 5 | பெரம்பூர் | 1 | 20 |
| 6 | பார்க் டவுன் | 1 | 20 |
| 7 | புரசைவாக்கம் | 1 | 20 |
| 8 | ஆயிரம் விளக்கு | 4 | 80 |
| 9 | திருவல்லிக்கேணி | 2 | 40 |
| 10 | எழும்பூர் | 2 | 40 |
| 11 | துறைமுகம் | 2 | 40 |
| 12 | சேப்பாக்கம் | 4 | 80 |

தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குவதற்கு அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிலிருந்து ரூ.48 இலட்சமும், எழும்பூர் தொகுதியிலிருந்து 2 இயந்திரங்களுக்கு ரூ.11 இலட்சமும், வடசென்னை நாடாளுமன்ற தொகுதியிலிருந்து 1 இயந்திரம் வாங்குவதற்கு ரூ.5.50 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. இதை போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் இயந்திரங்கள் கொள் முதல் செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்ப்பதாக வணக்கத்திற்குரிய மேயர் தெரிவித்தார்.

8. ஒவ்வொரு தெருவிலும், குடிநீர் வழங்கப்படும் நேரத்தை தெரிவிக்கும் வகையில், விளம்பர பலகை வைக்க வேண்டும் என்று வணக்கத்திற்குரிய மேயர் தெரிவித்தார்.

9. தொடர்ந்து இரு துறை அலுவலர்கள் / களப்பணியாளர்கள் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அடைப்பு குறித்த பிரச்சனைகளை பகுதி வாரியாக தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

10. கீழ்பாக்கத்தில், சென்னைக் குடிநீர் வழங்கு பகுதியின் அருகில் அமைந்துள்ள கால்வாய்துறையில் இருந்த கட்டிடங்களை அகற்றி அதன் மூலம் சுற்று சூழலை சுத்தமாக வைத்து, முக்கியமான குடிநீர் ஆதாரத்தை மாசு ஆகாமல் பாதுகாத்ததற்காக சென்னைக் குடிநீர் வாரியத்தை வணக்கத்திற்குரிய மேயர் பாராட்டினார்.

11. மேலும் “சென்னைக் குடிநீர் பகிர்மான கட்டமைப்பை வலிமைப்படுத்துவதற்காக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு வரும் கட்டமைப்பு பணிகள் முடியும் தருவாயில் இருப்பதாக கூறப்பட்டது.

12. எதிர் கொள்ள போகும் பருவமழை காலத்தை சமாளிப்பதற்கு ஏதுவாக, கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை விரைவில் கொள்முதல் செய்யுமாறு வணக்கத்திற்குரிய மேயர் கேட்டுக்கொண்டார்.

மேலும் இந்த ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களை ஆலோசனைகள் வழங்கும்படி வணக்கத்திற்குரிய மேயர் கேட்டுக்கொண்டார்.

<u>மண்டலம் 1:</u>

1. அம்மண்டலத்தில் உள்ள 4 பணி மனைகளில் உள்ள பொறியாளர்களின் காலியிடங்களை நிரப்புமாறு கூறப்பட்டது.
2. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோருக்கு அளிக்கப்படும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு (ரூபாய் 100/–) வழங்குவதைக் கண்காணிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மண்டலம் 2:

1. அம்மண்டலத்தில் உள்ள குடிசைமாற்று வாரிய மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கழிவு நீர் கட்டமைப்பை பராமரிப்பிற்காக எடுத்துக் கொள்ளும்படி கோரினார்.
2. கிழக்கு சிமெட்ரி சாலையில் உள்ள துாய்மைகேட்டை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

மண்டலம் 3:

1. அம்மண்டலத்தில் உள்ள 18 மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் குடிநீர் மாசுபடுவதைப் பற்றி அடிக்கடி புகார் வந்தவண்ணம் இருப்பதால், உடன் நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.
2. மேலும் பணிகள் முடிவடைந்தபின் பணிகளுக்காக தோண்டப்பட்ட குழிகளை தவறாமல் மூடும்படி கேட்டுக்கொண்டார்.

மண்டலம் 4:

1. அம்மண்டலத்தில் உள்ள 55 மற்றும் 56 வார்டுகளில் போதுமான களப்பணியாளர்கள் இல்லாததால் கழிவு நீர் அடைப்பை நீக்குவதில் தேக்கம் இருப்பதாக கூறினார்.
2. பேப்பர் மில் சாலையில் சாக்கடைநீர் வெளியேறுவதை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

மண்டலம் 6:

1. வார்டு 93ல் உள்ள டாக்டர் அம்பேத்கார் நகருக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளை விரைவில் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த இடஉரிமை குறித்து கேள்வி எழுப்பபட்டபோது, மண்டல தலைவர், அது திருமலை திருப்பதிக்கு சொந்தமான இடம் என்றும் அங்குள்ளோர்கள் அந்த இடத்தை ஆக்கிரமித்தவர்கள் என்றும் கூறினார்.
2. வார்டு 90 அயோத்தியா குப்பத்திலுள்ள கழிவுநீர் குழாய்கள் மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மண்டலம் 7:

1. கக்கன் குடியிருப்பில் வீடுகளின் கழிவுநீர், மழைநீர் கால்வாயில் விடப்படுவதை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

2. வார்டு 110ல் தேனாம்பேட்டையில் கழிவுநீர் தொடரமைப்பு அண்ணா சாலை வழியாக கீரிம்ஸ் சாலை கழிவு நீரேற்று நிலையத்திற்கு செல்கிறது. அண்ணா சாலையிலுள்ள மொத்த கழிவுநீர்க் குழாய்களும் சுத்தம் செய்யப்பட்டால், வார்டுகள் 108, 109 மற்றும் 112ல் கழிவு நீர் தெருவில் ஒடுவது தவிர்க்கப்படலாம்.

3. வார்டு 99இல் உள்ள அங்காளம்மன் கோயில் தெருவில் மழை காலங்களில் கழிவுநீர் வழிந்தோடுகிறது என்றும் இந்தியா மார்க் 2 குழாய்கள் மற்றும் பொதுக் குழாய்களின் பழுதடைந்த பிளாட்பாரங்கள் சரி செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<u>மண்டலம் 8:</u>

1. குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளிலுள்ள கழிவுநீரமைப்புகளை பராமரிப்பது. குடிசைமாற்று வாரியமா அல்லது சென்னைக் குடிநீர் வாரியமா என்பது முடிவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

2. பணிமனை 127, முத்துரங்கன் சாலையில் கழிவுநீர் சாலையில் வெளியேறுவது சரி செய்யப்படவேண்டும் என்றும் பணிமனை 129க்கு பணிமனைப்பொறியாளர் பணியமர்த்தப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<u>மண்டலம் 10</u>

1. மழைநீர் வடிகால்களில் உள்ள கழிவுநீர் ஓட்டம் நிறுத்தப்பட வேண்டும்.

2. 148ம் பணிமனை இராமகிருஷ்ணாமடம் சாலையில் கழிவுநீர் அமைப்புகளில் உள்ள குறைபாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

<u>தனி உறுப்பினர் :</u>

<u>மண்டலம் 1:</u>

1. வார்டு எண் 1ன் மாமன்ற உறுப்பினர், தனது வார்டில் உள்ள அடைத்துக்கொண்ட குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க கோரினார்.

2. தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையில், கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே உடைந்து போயுள்ள மனித நுழைவாயில் உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்.

3. மனித நுழைவாயில்களின் மூடிகள் சாலை மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

4. காமராஜ் சாலை, திருவள்ளுவர் சாலை மற்றும் அர்ஜுனா காலனியில் குடிநீர் போதுமான அளவு வழங்கப்படவேண்டும்.

5. தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையிலுள்ள கழிவுநீர் அடைப்பு நீக்கப்படவேண்டும்.

<u>எம் ஜி ஆர் கழக உறுப்பினர்:</u>

1. வார்டு 37ல் குடிநீர் குழாய்கள் மாற்றி அமைக்கப்பட்ட 5 தெருக்களில் குடிநீர் மாசு பட்டுள்ளது சரிசெய்யப்படவேண்டும்.

2. நெல்வயல் சாலையில் குடிநீர் குழாய், மழைநீர் கால்வாயின் கீழே உள்ளது. இது மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

<u>பகுஜன் சமாஜ் கட்சி:</u>

1. சுந்தராபுரம் மற்றும் புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்படவேண்டும்.

2. புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காந்தி நகரில் உள்ளஆதி திராவிடர் தெருவில் 5000ற்கு மேற்பட்ட மக்கள் வசிப்பதால் கழிவுநீர் கட்டமைப்பு வசதி செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

<u>இந்திய கம்யூனிஸ்ட் கட்சி:</u>

1. மல்லிப்பூ காலணி மற்றும் பி.கல்யாணபுரத்தில் ஏற்பட்டுள்ள கழிவுநீர் பிரச்சனைகள் சரி செய்யப்பட வேண்டும்

2. ஜெட்ராடிங் இயந்திரங்கள்அடிக்கடி பழுது ஆகின்றன. சிறிய பழுதுகளை சரி செய்யவே அதிக நேரம் பிடிக்கின்றது. எனவே, இப்பழுதுகளை உடனடியாக சரி செய்ய தகுந்த ஆட்களை நியமிக்கவேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தனர்.

<u>மக்கள் திராவிட முன்னேற்ற கழக மன்ற உறுப்பினர்:</u>

வார்டு 45ல் உள்ள "கே,பி பூங்காவில்" குடிநீரில் மாசு சரி செய்யப்பட வேண்டும்

<u>எதிர் கட்சித் தலைவர்</u>

1. வெகு காலத்திற்கு முன்பு பதிக்கப்பட்ட பழைய குழாய்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

2. குடிநீர் மாசுகளை மிக விரைவாக சரிசெய்ய புதிய வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டும். கழிவுநீர் வெளியேறுவதைத் தடுக்க, அனைத்து கழிவுநீரகற்று நிலையங்களும் 3 முறை மாற்றத்திலும், குறிப்பாக இரவிலும் ஓட வேண்டும்.

<u>ஆளுங்கட்சி தலைவர்</u>

1. வார்டு 66, 74 மற்றும் 75ல் உள்ள தாழ்வான பகுதிகளில் நீர் தேங்குவது சரிசெய்யப்பட வேண்டும்.
2. எம்.எம்.டி.ஏ காலனியிலுள்ள குடிநீர் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்.
3. வார்டு–74 மற்றும் 75 க்கு ஒரு தூர்வாரும் இயந்திரம் வழங்கப்பட வேண்டும்.
4. கழிவுநீர் அடைப்புகளை நீக்க, வார்டு 64, 74 மற்றும் 75க்கு குறைந்தபட்சம் 12 ஊழியர்கள் தேவை.
5. அசோக் நகர் மற்றும் ரசாக் தோட்டத்திலுள்ள கழிவுநீர் வெளியேற்றம் உடனடியாக சரி செய்யப்பட வேண்டும்.

இறுதியாக பேசிய நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலர் அவர்கள், கூட்டத்தில் கலந்து கொண்டவர்களது கருத்துக்களை வரிசைபடுத்திக் கூறி, இவை அனைத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இத்துடன் கூட்டம் முடிவுபெற்றது.

ஆணையர்
சென்னை மாநகராட்சி

மேலாண்மை இயக்குநர்
சென்னை குடிநீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

முதன்மை செயலர்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை